பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 08 சனிக்கிழமை (21-03-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 115

## 20 நிமிட நேரடிமோதலில்>

# நாயாறு பகுதிக்கு முன்னேற முயன்ற இராணுவத்தினரில் 15பேர் மரணம்!

## மணலாறில் 4 ஆம் நாள் கடும் போர்; விமானத் தாக்குதல் உச்சத்தில்

யாழ்ப்பாணம், மார்ச் 21

மணலாறுப் பகுதியில் நான்காவது நாளாக விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் உக்கிரமான போர் நேற்றுத் தொடர்ந்து நடந்தது. நேற்றைய தினம் குண்டு வீச்சு உச்சக் கட்டத்தில் நடந்ததாக அறியவருகிறது.

இதேவேளை நேற்று முன்தினம் மாலையில் கொக்குத் தொடுவாய் இராணுவ முகாமில் இருந்து நாயாறுப் பக்கமாக முன்னேற முயன்ற இராணுவத்தினரை விடுதலைப் புலிகள் வழிமறித்தபோது மூண்ட இருபது நிமிட நேர நேரடித் துப்பாக்கிச் சமரில் பதினைந்துக்குமேற்பட்ட இராணுவத்தினர் பலியானதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மணலாறுப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையேயான போர் நேற்று நான்காவது நாளாகத் தொடர்ந்து நடைபெற்றது.

கடந்த மூன்று நாட்களையும் விட நேற்று வானத் தாக்குதல் மிக உச்சத்தில் இருந்தது. கடற்பகுதியிலிருந்தும் பெரும் தாக்குதல் முடுக்கி விடப்பட்டிருந்தது. ஏராளமான பீரங்கிப் படகுகள் கடலில் குவிக்கப்பட்டு

[6 ஆம் பக்கம் பார்க்க]

## 22 வீர வேங்கைகள் களப்பலி

யாழ்ப்பாணம், மார்ச் 21

மணலாறில் நேற்று முன்தினம் நடந்த மோதல்களில் விடுதலைப் புலிகள் தரப்பில் 22 வீர வேங்கைகள் களப்பலியானார்கள்.

களப்பலியான வீரவேங்கைகள் விவரம் வருமாறு:-

மேஜர் ஜெயகரன் [கந்தையா ஐங்கரன் - கிளிநொச்சி], லெப்டினன்ட் ஒல்லியன் [சீனித்தம்பி குணரத்தினம் - மட்டக்களப்பு], லெப்டினன்ட் புனித்தேவன் [செல்வன் செல்வேந்திரன் - மட்டக்களப்பு], லெப்டினன்ட் புகழ்வேந்தன் [நாகராசா சிவநேசன் - மூதூர்],

இரண்டாம் லெப்டினன்ட செல்லத்துரை [மகாலிங்கம் பாஸ்கர் - புதுக்குடியிருப்பு], லெப்டினன்ட் ராகவன் [ஜயாத்துரை சிவகுமாரலிங்கம் - ஒட்டுசுட்டான்], இரண்டாம் லெப்டினன்ட் ஜெயா [மாணிக்கம் தியாகராசா - கிளிநொச்சி],

இரண்டாம் லெப்டினன்ட் யோகேந்திரன் [பொன்னம்பலம் ஆனந்தன் - மட்டக்களப்பு], இரண்டாம் லெப்டினன்ட் வாமதேவன் [சிவலிங்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## தாயகம் திரும்புவோரை பராமரிக்க ஐ. நா. இணக்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 21

தமிழகத்தில் இருந்து திரும்பும் ஈழத் தமிழ் அகதிகளை மடுவில் தனி முகாம் அமைத்து தங்க வைத்துப் பராமரிக்க ஐ. நா. அகதிகள் தூதரகம் ஏற்பாடுகள் செய்துள்ளதாக கொழும்பில் இருந்து கிடைத்த பிந்திய செய்திகள் தெரிவித்தன.

தமிழகத்தில் இருந்து கப்பல் மூலம் அழைத்து வரப்படும் அகதிகளை பொறுப்பேற்று, மடுப்பகுதியில் பாலம்பிட்டியில் தனி முகாம் ஒன்றில் தங்க வைப்பதற்கு ஐ. நா. அகதிகள் தூதரகம் இணக்கம் தெரிவித்திருக்கிறது.

முதற்கட்டமாக, ஏற்கனவே தமிழகத்தில் இருந்து வந்து, பேசாலையில் அரசஅதிபரால் நிர்வகிக்கப்பட்டு வந்த முகாமில் தங்கியிருந்த 16 குடும்பங்களைச் சேர்ந்த 56 பேர் ஐ. நா. அகதிகள் தூதரக அதிகாரிகளால் பொறுப்பேற்கப்பட்டுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

தமிழகத்திலிருந்து வரும் அகதிகளைப் பராமரிப்பதற்கு ஐ. நா. அகதிகள் தூதரகம்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## ஜெயலலிதா கோரிக்கை

சென்னை, மார்ச் 21

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் அடிக்கடி கைதாவதையும், துன்புறுத்தப்படுவதையும் தடுக்க விரைவில் நடவடிக்கை எடுக்குமாறு இந்திய மத்திய அரசை தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா கேட்டுள்ளார்.

[இ-10]

## இலங்கை திரும்புமாறு அகதிகள் மீது பலவந்தம்

### பி. பி. ஸி. செய்தியாளர் தகவல்

லண்டன், மார்ச் 21

இலங்கைக்கு ஈழ அகதிகள் திரும்பிச் செல்வது அவர்களது சொந்த விருப்பம்தான் என்றாலும், அவர்கள் மீது மென்மையான பலவந்தம் பிரயோகிக்கப்படுவது இப்போது தெரிகிறது.

இப்படியான கருத்தை பி. பி. ஸி. செய்தியாளர் சாம் ராஜப்பா தெரிவித்துள்ளார்.

பி. பி. ஸிக்கு அவர் நேற்று அனுப்பிய செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது :-

சகல வசதிகளும் கொண்ட மண்டபம் முகாமிலிருந்து அகதிகளை வெளியேற்றி வேறு சிறு [illegible]

[6ஆம் பக்கம் பார்க்க]

## முச்சந்தி முரளி



இப்படி அடிக்கடி சுற்றி வளைக்கிறது தான் பாதுகாப்பு என்ற எண்ணமோ...!

## வடமராட்சி நோக்கி ஷெல்

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்று அதிகாலை 6.30 மணியில் இருந்து எட்டு மணி வரை வடமராட்சி நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

வல்வெட்டித்துறை, ஊறணி, பொலிகண்டி, தொண்டமானாறு பகுதிகளில் ஷெல்கள் விழுந்து வெடித்தன.

[இ-15-3]

## காங்கேசன் மார்க்கமாக நோயாளர்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 21

இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் உள்ள நோயாளர்களை யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிப்பதற்கும் அவர்கள் குணமடைந்த பின்னர் மீண்டும் அவர்களை முன்னைய இடங்களுக்கு அனுப்பி

[6 ஆம் பக்கம் பார்க்க]

## ஜி. சீ. ஈ. பரீட்சை நேர அட்டவணை

எதிர்வரும் ஏப்பிரல் முதலாம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள ஜி. சீ. ஈ. [உயர்தர] விசேட பரீட்சையின் நேர அட்டவணை 5ஆம் பக்கத்தில்.

## குமண வருகிறது

யாழ்ப்பாணம், மார்ச் 21

'குமண' கப்பல் கொழும்பில் இருந்து நாளை மறுதினம் பருத்தித்துறை வந்து சேரும்.

அத்தியாவசிய பொருள்களுடன் ஜி. சீ. ஈ. [உயர்கர] விசேட பரீட்சைக்குத் தேவையான காகிதாதிகளும் இந்தக் கப்பலில் எடுத்து வரப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

[இ-3]

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 21

மணலாறில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விவரம் வருமாறு:

- ★ ஏ. கே. எல். எம். ஜி. — 02
- ★ ரம் மகஸின் — 02
- ★ ரி 56-2 — 01
- ★ ரி 56-1 — 02
- ★ ரி 81 — 01
- ★ ஐ. எம். ரவைகள் — 564

[6ஆம் பக்கம் பார்க்க]

## அகதி முகாம் சுற்றிவளைப்பு 3 குடும்பஸ்தர்கள் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 21

திருகோணமலை மாவட்டத்தில் பள்ளிக்குடா அகதி முகாம் கடந்த திங்கட்கிழமை படையினரால் சுற்றி வளைக்கப்பட்டது. இந்தச் சுற்றி வளைப்பின்போது மூன்று குடும்பத்தவர்கள் கைது செய்யப்பட்டு இராணுவ முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

ஆரியதம்பி மனோகரன் [38 வயது], புண்ணியம் கணபதிப்பிள்ளை [28 வயது], குணசேகரம் கணபதிப்பிள்ளை [40 வயது] ஆகியோரே கைதானவர்களாவர்.

[இ-3]

## நெடுந்தீவில் கைதானோர் சென்னை நீதிமன்றத்தில்

சென்னை, மார்ச் 21

நெடுந்தீவில் வைத்து இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு தமிழக காவற்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்ட தீவிரவாத இயக்க உறுப்பினர்கள் என்று சொல்லப்படும் இருவரும் நேற்று சென்னை உயர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

நீதிபதி எஸ். சௌந்தரபாண்டியன் இவர்கள் இருவரையும் அடுத்த மாதம் 9 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

(முன்வந்த செய்தி 3 ஆம் பக்கத்தில்) (இ-10)

## அன்னை நினைவாக

## குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், மார்ச் 21

அன்னை பூபதி நினைவாக குடாநாட்டின் பல பகுதிகளிலும் அடையாள உண்ணாவிரதங்களும் நினைவஞ்சலிக் கூட்டங்களும் நடைபெற்று வருகின்றன.

நேற்றுக் காலை பண்டத்தரிப்பு பனிப்புலம் அம்மன் கோவில் முன்றலில் அடையாள உண்ணாவிரதம் இடம் பெற்றது.

நாளை ஞாயிறு காலை அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் அடையாள உண்ணாவிரதமும் நினைவஞ்சலிக் கூட்டமும் நடைபெறும்.

அடையாள உண்ணாவிரதம் காலை 8.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை நடைபெறும். நினைவஞ்சலிக் கூட்டம் மாலை 7.00 மணிக்கு ஆரம்பமாகும்.

[இ]

## இரத்தம் கோரி அவசர வேண்டுகோள்

யாழ். போதனா வைத்தியசாலைக்கு அவசரமாக இரத்தம் தேவைப்படுகிறது.

கடந்த திங்கட்கிழமை இரத்தம் வழங்க பதிவு செய்தவர்கள் இன்று சமுகமளிக்கலாம் என்றும் —

இரத்தம் வழங்க விரும்புகிறவர்களுக்கு வாகன வசதி செய்து தரப்படும் என்றும் — பாலம் பணிமனை அறிவித்துள்ளது.

[இ-3]

## 2 ஆவது நம்பிக்கையில்லா பிரேரணையும் தோல்வி

கொழும்பு, மார்ச் 21

அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டுவந்த இரண்டாவது நம்பிக்கையில்லாப் பிரேரணை 70 பெரும்பான்மை வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது.

பிரேரணைக்கு ஆதரவாக 49 வாக்குகளும் எதிராக 119 வாக்குகளும் கிடைத்தன.

இரண்டு அரச வங்கிகளும் வங்குரோத்து நிலையை அடைந்து விட்டதாகவும் அவை மறுசீரமைக்கப்பட விருப்பதாகவும் பிரதமர் டி. பி. விஜயதுங்கா விடுத்த அறிக்கையைக் கண்டித்தே இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டு வந்திருந்தன.

எயர் பஸ் கொள்வனவு தொடர்பாக அரசுக்கு எதிராக கொண்டுவரப்பட்ட மற்றும் ஒரு நம்பிக்கையில்லாப் பிரேரணை நேற்று முன்தினம் தோற்கடிக்கப்பட்டது தெரிந்ததே.

[இ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"*Practice Makes one Perfect*"

## ஆண்டு - 5 புலமைப்பரிசில் பரீட்சை - 1991

இப் பரீட்சைக்கான பயிற்சிப் பரீட்சைகள்

★ 22—03—1992 ★ 29—03—1992
★ 05—04—1992 ★ 12—04—1992 ஆகிய

ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகல் 1-00 மணிக்கு இந் நிறுவனங்களில் எம்மால் நடத்தப்படும்.

★ Bond Institutes — யாழ்ப்பாணம்
★ Express Institute — இருபாலை
★ Pearl Institute — கோப்பாய்
★ Kugan Institute — ஆவரங்கால்
★ Satha Pons — வடமராட்சி
★ Brilliant — தென்மராட்சி
★ Vinyls — சுன்னாகம்
★ Bitsmans — மானிப்பாய்
★ Vinayahar — ஆனைக்கோட்டை
★ Paarathy — சித்தன்கேணி
★ National Academy — பண்டத்தரிப்பு

மேலதிக விவரங்களுக்கு;

**BOND INSTITUTES,**

58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[4552]


## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அஞ்சலிக்குரிய மறக்குலத்து வேங்கை

**தவமணிநாயகம் முரளிகிருஷ்ணா**

(லெப்டினன்ட் சிறைவாசன்) - [சிறை]

அன்னை மடியில்: **24—11—1967**

அரக்கர் பிடியில்: **21—03—1989**

கையிலே சுடுகுழலும் கருத்திலே விடுதலையும்
மெய்யிலே புலியின் சின்னம் வீரனுக்கு உரிய நடை
செய்ய நின் திருமுகத்தில் சிரிப்பொலிக் கலகலப்பு
ஐயனே என்றும் எங்கள் அகத்தினை விளக்குதையா!

நாளெல்லாம் உன்னினைப்பு நாவெல்லாம்
உனது பேச்சு
வாழ்வெல்லாம் முரளி நாமம் மறக்கவும் ஆமோ என்று
தாழ்விலா நண்பர்; சுற்றம் சாற்றியே
போற்றுகின்றார்
தனயனே; தமிழன்னைக்கு அரியணை தாங்கி நிற்பாய்!

சிறையிலே கிடந்தாய் தீயோர்
சித்திரவதைக்குள்ளானாய்
திறையுடை உயிரை இந்த மண்ணுக்கு நேர்ந்து
வைத்தாய்
பொறையுடன் சிறையில் மீண்டு விடுதலை
வேட்கை கொண்டு
சிறைவாசன் வீரவேங்கை எனப்புகழ்
நாட்டிக் கொண்டாய்!

'உன்வீர ஆத்மா என்றும் எம்மோடு வாழும்'

பெற்றோர், சகோதரர்.

'உதயதாரகை',
மல்லாகம்.

[20133]


SPECIAL
SPOKEN ENGLISH

குறுகிய கால விசேட பயிற்சி

★ ஆங்கிலம் எழுத - வாசிக்க - பேச ஆரம்ப முதல் நவீன முறையில் இலகுவாக கற்பிக்கப்படும்.
★ தினசரி வகுப்புகள் [2 மாதம்]
★ தொழில் புரிவோருக்கு சனி - ஞாயிறு மாலை வகுப்புகள்.
★ நேர்முகப் பரீட்சை - கேள்வி - பதில் - பயிற்சி அளிக்கப்படும்.
★ முன் அனுபவம் தேவையில்லை.

TOEFL கற்பிக்கப்படும்.

நேரில் விண்ணப்பிக்கவும்:

ஆரம்பம்: 23-03-1992

**JAFFNA TECHNICAL INSTITUTE**

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
[றெயில்வே கடவை அருகே - மேல் மாடி]

[20169]


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 07 — 12 — 1915

மறைவு: 21 — 02 — 1992

**சரவணமுத்து நாகலிங்கம்பிள்ளை**

(சாமியார்)

புங்குடுதீவென்னும் புகழ் பூத்த
பொன்னகரில்
சைவத் திருத்தலங்கள் - சரணம்
என நின்றாய்
ஆலயங்கள் தோறும்
அரும்பணிகள் செய்தாய்
நயினையில் இருந்து
நல்லூர்க் கந்தன் - காலடிக்கே
பல பக்தருடன் கூடி
நடைபாதையாய் - வந்து
பல பஜனைகளை செய்தாய்
கையிலே சல்லாரி கழுத்திலே
உத்தராட்சம் - அவர்
நெற்றியிலே திரிபுண்டரம்-அதன்
நடுவே சந்தணமாம்
இரண்டையும் சாத்தி திருநீறு-அளித்து
இடுப்பிலே சுதரும் கட்டி
சைவ மெய்த் தொண்டர்-என
சைவர்கள் அவையில் கூடி
ஸ்ரீ பரமாச்சாரிய சுவாமிகளால்
பட்டமும் அளிக்கப்பட்டு
மனைவி மக்களுடன் மகிழ்ந்திருந்த போது
இன வெறியன் அந்த
இலங்கை ராணுவம்
சுற்றி வளைத்து சூழ்ந்தது-தீவை
தரணியில் அசப்பட்டார்
எங்கள் சைவத் திருத் தொண்டர்
தப்ப வழி இல்லை - ஐயோ
எப்படியும் நாம் போவோம்
என்றிருந்தோம் ஆறுதலாய்
மாதமும் ஐந்து ஆனதின் - பின்பு
அந்நியன் ஆட்சியில் நடந்தது-யாதோ
அடைந்தார் சிவபதம்
அன்பான சிவத்தொண்டன்
ஆண்டவன் திருவடியில்
அன்னார்க்கும் இடமுண்டு-என
மனம் தேறியே நிற்கின்றோம்.

நன்றி;

**என். தடாதகைப்பிராட்டி,**
அரசினர் வைத்தியசாலை,
புங்குடுதீவு.

[201..]


## லான்ட்மாஸ்டர் தேவை

எமது சங்கத்திற்கு நல்ல நிலையிலுள்ள லான்ட்மாஸ்டர் (இரண்டு சக்கர உழவு இயந்திரம்) பெட்டியுடன் தேவை.

அலுவலக நேரங்களில் விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

தலைவர்,
**கோண்டாவில் - இணுவில்,**
**தெங்கு-பனம் பொருள் கூட்டுறவுச் சங்கம்,**
கே. கே எஸ். வீதி, தாவடிச் சந்தி,
கோண்டாவில்.

[சி-1681]


## வடமாநில சுருட்டுத் தயாரிப்பாளர் சங்கம்
## 10 ஆவது ஆண்டு பொதுக்கூட்டம்

**காலம்;** 22-3-1992 ஞாயிற்றுக்கிழமை
காலை 10 மணி

**இடம்:** சங்கக் காரியாலயம்,
உப்புமடம் பிள்ளையார் கோவிலடி,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

மு. கு. நாட்டு நிலைமை காரணமாக எமது உற்பத்தியாளருக்கு இருக்கும் கஷ்டங்களை போக்குவதற்கான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

[20166]


## பதவி வெற்றிடம்

எமது நிறுவனத்தின் வர்ண புகைப்பட ஆய்வு கூடத்தில் (Colour Photographic Laboratory) உதவி பிரதியாக்குனர் (Assistant Printer) பதவிக்கு முன் அனுபவம் உள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

நவீன தொழில்நுட்பம் கொண்ட பிரதியாக்கும் கருவிகளில் அனுபவம் உள்ளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்பங்களை எமது நிறுவன முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**விண்ணப்ப முடிவு திகதி: 31 - 03 - 1992**

**கலக்சி புகைப்பட சேவை**
337, 1வது மாடி. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

[20172]


## 16 ஆம் நாள் நினைவஞ்சலி



**சுப்பிரமணியம் இராசலிங்கம் [இராசா]**

(உரிமையாளர் — ராஜன் வர்த்தக நிலையம்,
திருநெல்வேலி சந்தி)

நண்பனாக, உற்ற உறவினராக இருந்து யாவருக்கும் உதவும் உற்ற உத்தமனான நீ திடீரென வவுனியாவில் மறைந்தாய். ஆனால்... நாம் எதையும் மறக்கத் தயாரில்லை. நீ எதை எதை நினைத்து வாழ்ந்தாயோ அவைகளை செயற்படுத்துவோம். உற்ற தோழனுக்கு நீதான் வரைவிலக்கனம்.

ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்

322 (B) ஆஸ்பத்திரி வீதி,
குமரன் ரேட்ஸ்,
யாழ்ப்பாணம்.

உற்றதோழன், தம்பி,
செ. மதனமோகன்

[20174]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 264 பொலிஸாருக்கு எதிராக மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள்

கொழும்பு, மார்ச் 21

காணாமற்போனவர்கள் தொடர்பாக ஆராயும் விசேட ஜனாதிபதி ஆணைக் குழுவிடம் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் உட்பட 264 பொலிஸாருக்கு எதிராக மனித உரிமைகள் மீறல் குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

முறைப்பாடு செய்யப்பட்டுள்ள 264 பொலிஸாரில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் இருவர், பொலிஸ் அத்தியட்சகர்கள் நால்வர், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள் எட்டுப் பேர், மற்றும் தலைமைச் செயலக இன்ஸ்பெக்டர்கள், சார்ஜன்ட்கள், பொலிஸ் கான்ஸ்டபிள்கள் 150 பேர் அடங்குவர் என தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை ஒரு உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் உட்பட பொலிஸ் உத்தியோகத்தர்கள் 6 பேருக்கு எதிரான முறைப்பாடுகள் பரிசீலனை செய்யப்பட்டுள்ளன என்றும், அவர்களுக்கு எதிராக சாட்சிகள் இருப்பதால், அவர்கள் தொடர்பான சாட்சியங்களைப் பதிவு செய்யும் வேலை விரைவில் ஆரம்பமாகுமெனவும் கூறப்படுகிறது.

ஏனைய முறைப்பாடுகள் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளும் வேலைகள் தற்போது நடைபெறுவதாகவும் மற்றைய பொலிஸாரினது முறைப்பாடுகள் மீதான விசாரணை அண்மையில் ஆரம்பமாகுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

## நெடுந்தீவில் கைதானோர் தமிழ் தேசியப் படை உறுப்பினர்

### கூட்டுப்படை அதிகாரி கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 21

நெடுந்தீவில் வைத்து இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு தற்போது இந்திய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்ட, இரண்டு இந்தியத் தமிழர்களான ஆறுமுகமும், முரளியும் தமிழ்நாடு தமிழ்த் தேசிய எழுச்சிப் படையைச் சேர்ந்தவர்களாம்.

கூட்டுப்படைகள் தலைமையகப் பேச்சாளர் கேர்ணல் சரத் முனசிங்கா இவ்வாறு தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட இருவரும் யாழ்ப்பாணம் இராணுவத் தளத்தில் வைத்து விசாரிக்கப்பட்டனர். அதன் பின்னர் அவர்கள் நாடு கடத்தப்படுவதற்காக, இலங்கைக் கடற்படை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர் என்றும் அவர் சொன்னார்.

தமிழ் நாட்டில் இயங்கும் தமிழ்த்தேசிய எழுச்சிப்படை தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக இயங்கும் ஓர் அமைப்பு என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

## முருகன், நளினி உட்பட 18 பேருக்கு காவல் நீடிப்பு

சென்னை, மார்ச் 21

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாகக் காவலில் வைக்கப்பட்டுள்ள முருகன், நளினி, பத்மா உட்பட 18 பேருக்கான சிறைக் காவல் எதிர்வரும் மே மாதம் 15 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

சிறப்புப் புலனாய்வுப் பிரிவின் கோரிக்கைக்கு இணங்க சிறப்பு நீதிமன்றத்தின் தனி நீதிபதி எஸ். சௌந்தர பாண்டியன் செங்கல்பட்டு துணைச் சிறைக்கு நேற்று முன்தினம் நேரில் சென்று காவல் நீடிப்புக்கு உத்தரவிட்டார். [இ-எ]

## மீனவர்களுக்கு அறிவுறுத்தல்

குருநகர், மார்ச் 21

கொழும்புத்துறைக்கு நேரே கடலில் இருக்கும் வெளிச்ச வீட்டுக்கு அப்பால் மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என்று குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் கங்கம் அறிவித்துள்ளது.

குடாக்கடல் பகுதியில் படையினரின் தாக்குதல்கள் அதிகரித்திருப்பதே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது. [ஒ-51]

## நாகர்கோவிலில் உண்ணாவிரதம்

வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் பகுதியில் இன்று சனிக்கிழமை அன்னைபூபதி ஞாபகார்த்த அடையாள உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்படும்.

கடற்புலிகளின் அனுசரணையுடன் நாகர்கோவில் நாகதம்பிரான் கோவிலுக்கு அருகில் இன்று இரவு 7 மணிக்கு நினைவஞ்சலிக் கூட்டமும், தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். [ஒ-5-144]

## ஜெயலலிதாவின் ஆட்சி ஜூலையுடன் முடிந்து விடும்

### நாஞ்சில் மனோகரன் சொல்கிறார்

சென்னை, மார்ச் 21

ஜெயலலிதாவின் ஆட்சிக் காலம் எதிர்வரும் ஜூலை மாதத்தோடு முடிந்துவிடும். ஜனாதிபதி வெங்கட்ராமனின் பதவிக் காலம் ஜூலையில் காலாவதியாகிறது. அதன் பிறகு ஜெயலலிதா ஆட்சி நீடிக்காது.

இவ்வாறு தெரிவித்தார் முன்னாள் அமைச்சரும், தி. மு. க. பிரமுகருமான திரு. நாஞ்சில் மனோகரன்.

நாகர்கோவிலில் நடந்த கூட்டம் ஒன்றில் திரு. மனோகரன் பேசினார். அப்போதே அவர் மேற்கண்டவாறு சொன்னார். பிரஸ்தாப கூட்டத்தில் பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது:-

மகா மகம் புனிதமான நாள். ஆனால் அன்றைய தினம் ஆலயத்தில் சினிமா ''செட்டில்'' நடப்பது போன்ற நிகழ்வுகள் இடம் பெற்றன.

மகா மகத்தில் ஜெயலலிதா குளிப்பதற்கென்று குளத்தடியில் ஒரு தனி அறை கட்டப்பட்டது. ஆனால் முதலமைச்சர் அந்த அறையில் குளிக்கவில்லை.

ஜெயலலிதாவை காவல் துறையினர் சுற்றி நிற்க, அவர் மீது 21 குடம் தண்ணீரை தோழி சசிகலா ஊற்றினார். 21 குடம் புனித நீர் ஊற்றி கழுவ வேண்டிய அளவுக்கு அவரிடம் பாவம் இருந்திருக்கிறது. ஆனால் அவர் கோவில் குளத்தில் மகாராணி போல் நடந்து கொண்டார் — என்றார். [அ-72]

## தி. மு. கவினர் உண்ணாவிரதம்

சென்னை, மார்ச் 20

தமிழகத்தில் 'தடா' சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருப்பவர்களை விடுதலை செய்யும்படி கோரி, தி. மு. க. இளைஞர் முன்னணியினர் மாவட்டத் தலைநகரங்களில் இம்மாதம் 23 ஆம் [illegible] னர்.

## மாத இறுதிக்குள் மேலும் 2 ஆயிரம் அகதிகள் வருவர்

கொழும்பு, மார்ச் 21

இம்மாத இறுதிக்கு முன்பதாக மேலும் 2 ஆயிரம் தமிழ் அகதிகள் இலங்கை திரும்புவார்கள் என்று அறிவிக்கப்படுகின்றது.

இத்துடன் நாடு திரும்பியோரின் எண்ணிக்கை 12 ஆயிரமாக அதிகரிக்கும்.

இந்த 2 ஆயிரம் பேரும் மூன்று தொகுதிகளாக இலங்கை வருவார்கள் என்று புனர்வாழ்வு அதிகார சபைத் தலைவர் திலக சந்திரசேகரா தெரிவித்தார்.

இரண்டு தொகுதியினர் எதிர்வரும் 22 ஆம், 28 ஆம் திகதிகளில் திருகோணமலை வந்தடைவார்கள்.

மற்றுமொரு தொகுதி அகதிகள் எதிர்வரும் 28 ஆம் திகதி மன்னார் வந்தடைவர். இதுவரை நாடு திரும்பிய 9 ஆயிரத்து 800 அகதிகளில் 6 ஆயிரத்து 500 பேர் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளனர். ஏனையோர் நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும் திரு. சந்திரசேகரா தெரிவித்தார். [இ-எ]

## மட்டுவிலில் திருட்டு

மட்டுவில் உப தபாற் கந்தோருக்கு முன்பாக உள்ள கடையொன்றில் சுமார் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

வியாழன் இரவு இச்சம்பவம் நடந்தது.

சுமார் இரண்டு வாரங்களுக்கு முன்பும் இதே வீதியில் ஒரு கடையில் சுமார் 40 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருட்டுப் போனது குறிப்பிடத்தக்கது. [இ-31[

## சோவியத் மறைவின் பின்னர் விண்வெளிக்குச் செல்லும் ரஷ்ய - ஜேர்மன் வீரர்கள்

மாஸ்கோ, மார்ச் 21

சோவியத் யூனியனின் மறைவின் பின்னர் முதல் தடவையாக இரண்டு ரஷ்யவிண்வெளி வீரர்களும் ஒரு ஜேர்மன் விண்வெளி வீரரும் விண்வெளிக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

அவர்களை ஏற்றிக்கொண்டு ''சோயுஸ்'' விண்கலம் ஒன்று கஸகிஸ்தான் நாட்டில் உள்ள விண் தளத்தில் இருந்து புறப்பட்டது.

மறைந்த சோவியத் யூனியன் அனுப்பிய 'மிர்' விண்வெளி நிலையம் தற்போது விண்ணில் வலம் வந்து கொண்டிருக்கின்றது.

மிர் விண்கலத்தில் கடந்த பத்து மாதங்களாக தங்கியிருந்து ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள விண்வெளி வீரர் செர்கி கிரிக்கலேவை பூமிக்கு திருப்பி அனுப்பி வைப்பதற்காகவே, இம்மூன்று விண்வெளி வீரர்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

சோவியத் பிரசையாக 'மிர்' விண்வெளி நிலையத்தில் வலம் வந்து கொண்டிருக்கும் செர்கி கிரிக்கலேவ் ரஷ்யப் பிரசையாக பூமிக்குத் திரும்புவார் என்று தெரிவிக்கப்படுகின்றது. [இ-எ]

## லிபியாவிலுள்ள அமெரிக்கரை வெளியேறுமாறு பணிப்பு

திரிப்பொலி, மார்ச் 21

லிபியாவில் உள்ள அமெரிக்கப் பிரஜைகளை உடனே அந்த நாட்டை விட்டு வெளியேறும்படி அமெரிக்க அரசாங்கம் கேட்டுள்ளது.

லிபியாவுக்குச் செல்வதான விமான வழிப் பயணங்கள் மீது தடை ஒன்றைப் போடுவதற்காக அமெரிக்கா, பிரான்ஸ் மற்றும் பிரிட்டன் ஆகியன சேர்ந்து செய்யும் கூட்டு முயற்சிகள் பற்றி அமெரிக்க வெளியுறவு அதிகாரி ஒருவர் குறிப்பிடுகையில் —

இந்த முயற்சியின் விளைவாக அங்குள்ள அமெரிக்கர்கள் சிக்கித் தவிக்க நேரிடும் — என்று சொன்னார்.

பிரான்ஸும் தனது பிரசைகளை அங்கிருந்து வெளியேறும்படி கோரியுள்ளது.

இரண்டு தினங்களுக்கு முன்னர் பிரிட்டன் இது பற்றி எச்சரிக்கை ஒன்றை விடுத்திருந்தது.

பான் அம் விமானம் குண்டு வைத்து தகர்க்கப்பட்டது தொடர்பாகத் தேடப்பட்டு வரும் இரண்டு லிபியர்களையும் ஒப்படைப்பதற்கு லிபியா மறுப்புத் தெரிவித்து வருகின்றது.

இதன் காரணமாக லிபியா மீது புதிய தடை விதிப்பது பற்றி விவாதிக்க ஐ. நா. பாதுகாப்புச்சபை கூடவுள்ளது. [த-எ]


உ
சிவமயம்

திருமண அழைப்பு

மணமகன்: செல்வன் மகேந்திரன்
(மகம்)
(பங்காளர் வஜிரா றேடர்ஸ், கொழும்பு)

மணமகள்: செல்வி வனஜா

நாள்: பிரசோற்பத்தி வருடம் பங்குனித் திங்கள் 10 ஆம் நாள் (23-03-1992) திங்கட்கிழமை.

நேரம்: மணவாளக்கோலம் — பகல் 11-16 — 1-16 (மணமகனில்லம்)
மங்கலநாண்பூணல் — மாலை 5-45 — 7-32 (மணமகளில்லம்)

தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து சிறப்பித்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புரிமையுடன் அழைக்கின்றோம்.

(இரு வீட்டார் அழைப்பு]

★ தங்கள் நல்வரவை நாடும் ★

திரு. திருமதி ம. இரத்தினசபாபதி, (வேலணை மேற்கு, வேலணை.),
திரு. திருமதி இ. பாலச்சந்திரன், (மணமகனின் சகோதரர்) 160, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

திரு. திருமதி க. குழந்தைவேலு, (வேலணை வடக்கு, வேலணை.),
திரு. திருமதி கு. சரவணநாதன், (மணமகளின் சகோதரர்) 47, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.

[20153]



5 ஆம் ஆண்டில்.......

★ ஜெகன் படப்பிடிப்பாளர் ★
(JAEGAN FOTO)

இன்று 21-03-1992 [சனிக்கிழமை] எமது ஸ்தாபனம் 5 ஆம் ஆண்டில் காலடி எடுத்து வைப்பதை முன்னிட்டு எமது நண்பர், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது மகிழ்ச்சியையும், மனமார்ந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

''யாழ். நகரில் சிறந்த கலர்ப்படப் பிடிப்பிற்கு நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்''

ஜெகன் போட்டோ
399, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

[4553]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

B- வெங்காய விதைகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: பிள்ளையார், 251, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். [20167]

## தேவை

யாழ். நகரில் இருக்கும் ஆங்கில மருந்துச்சாலைக்கு அனுபவமுள்ள பெண் விற்பனையாளர் தேவை. ஆங்கில அறிவும், கணக்கியல் ஆற்றல் உள்ளவர்களும் மாநகர சபைக்கு உட்பட்ட இடத்தில் வசிப்பவர்களும் விரும்பத்தக்கது. 392, மே. பா உதயன், யாழ்ப்பாணம். [20110]

## மணமகன் தேவை

யாழ்ப்பாண இந்து, செவ்வாய்க் குற்றமற்ற, படித்த அழகிய, 42 வயது மணப்பெண்ணுக்குப் பெற்றோர் மணமகனைத் தேடுகின்றனர். சீதனம் தரப்படும். நட்சத்திரம் மகம், மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். [20155]

யாழ்ப்பாண இந்து, 8இல் செவ்வாயுள்ள 34வயது, அழகிய, பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியைக்கு மணமகனைப் பெற்றோர் தேடுகின்றனர். நட்சத்திரம்: விசாகம், T. A. பட்டதாரி, ஆசிரியர் விரும்பத்தக்கது. மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். [20123]

## மணப்பெண்கள் தேவை

இத்தாலியிலுள்ள செவ்வாய்க் குற்றமற்ற 30 வயது மணமகனுக்கும், குற்றமுள்ள 34 வயது மணமகனுக்கும் தேவை. எம்மிடம் தாரமிழந்த, விவாகரத்தான மணமக்கள் பலர் இருக்கிறார்கள். மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். [20154]

## புலமைப் பரிசில் பரீட்சை (ஆண்டு - 6,5)

புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை ஆண்டு 6, 21-3-92 சனி மு. ப. 7-00, மு. ப. 11-00 மணி நேரங்களிலும் ஆண்டு 5, 22-3-92 ஞாயிறு மு.ப. 8-00, மு.ப 11-00 மணி நேரங்களிலும் நடைபெறும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [20163]

## O/L கணிதம்

மாணவர்கள் தாமாகவே கற்றலை மேற்கொள்ளச் சிறந்த கணித நூல்கள், ஆசிரியர் சச்சிதானந்தனின் உதவி நூல் வரிசைகளாகும். மடக்கைகள், விருத்திகள், புள்ளி விவரவியல், திருகோணகணிதம் ஒவ்வொன்றும் ரூ. 20/-. பூபாலசிங்கம், ஸ்ரீலங்கா மற்றும் புத்தகசாலைகளில். [5066]

## அம்பாள் திருமண சேவை

டாக்டர்கள், I.C.M.A., B. Sc., B. A. வங்கி உத்தியோகத்தர்கள், ஆசிரியைகள் ஆகிய மணப்பெண்களுக்கு மணமக்கள் தேவை. விண்ணப்பம் 50/- ரூபா. ஞாயிறில் தொடர்பு கொள்ளவும். சின்னச்சாமிக் குருக்கள் சண்முகஐயர், வீரமாகாளி அம்மன் கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். [20 58]

## இலவச திருமண சேவை

விவாகப் பதிவின் பின் ரத்துச்செய்த 39 வயது, U. K. வங்கி உத்தியோகத்தருக்கு பொருத்தமான பெண் தேவை. U. K. அனுப்பிவைத்தல் விரும்பத்தக்கது. சேவையை விரும்புபவர்கள் ஞாயிறு காலையில் சந்திக்கவும். து. விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். [4538]

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு: 12 — 08 — 1924

உதிர்வு: 20 — 02 — 1992



திருமதி

## சிவகாமி சின்னத்தம்பி

எங்கள் இல்லத்தின் இணையில்லாத் தலைவியாய் விளங்கி, மனையும் சுற்றமும் பேணிக்காத்து, பாசமுடன் எம்மையெல்லாம் அரவணைத்து, புவிமீது வாழும் வழி அமைத்து, அன்பின் உறைவிடமாய், பண்பின் சிகரமாய் வாழ்ந்து தோன்றாத் துணையாக எம் நினைவுகளில் என்றென்றும் வாழும் எங்கள் பாசத் தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் ஈமக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், மற்றும் எல்லா வழிகளிலும் உதவி நல்கியோருக்கும் நன்றி நவில்கிறோம். அத்துடன் இன்று (21-03-1992) நடைபெறும் அந்தியேட்டி வைபவத்திலும், வீட்டுக்கிருத்திய வைபவத்திலும் கலந்து கொண்டு, மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் வேண்டுகிறோம்.

கணவன், மக்கள், மருமகர்,
சகோதரர்கள், உறவினர்கள்.

அத்துளு அம்மன் கோவிலடி,
கரவெட்டி கிழக்கு. [4551]

---

# 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்: 10 — 2 — 1966



இறைவன் அடியில்: 21 — 3 — 1986

செல்வி

## சேனாதிராசா பிரேமதரா

அன்பு நெஞ்சங்களில்
உறங்குகின்ற எம் பிரேமா
உங்களுக்கு கூறும்
வாழ்த்துக்கள் கேட்கிறதா?
வங்கக் கடலலைகள்
ஒலிப்பது கேட்கிறதா?

அன்பு பிரேமா
அவதரித்த நாளன்று
விண்ணில் நட்சத்திரக் கொடிகள்
விருடன் பறந்ததே
மண்தாய் பெற்றெடுத்த
பிரேமா உங்களை
வண்ணத் தமிழால்
வாழ்த்திட வார்த்தை ஏது?

இன்று உங்களைக் காணவழியின்றி தவிக்கிறோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய தினமும் இறைவனை வேண்டுகிறோம்.

உங்கள் நினைவுடன் வாழும்;
பெற்றோர், அத்தான், அக்கா,
பெறாமகன், அம்மம்மா,
உற்றார், உறவினர்கள்.

50/25, வைரவர் கோவிலடி,
கொட்டடி. [20081]

---

## சாவகச்சேரி நகரசபை

# ஆதனவரி அறிவித்தல்

1992 ஆம் ஆண்டு 1 ஆம் காலாண்டிற்குரிய ஆதன வரியை தண்டமின்றி 31-03-1992 செவ்வாய்க்கிழமை பகல் 12-30 மணிவரை செலுத்திக்கொள்ளலாமென்பதையும், குறிப்பட்ட திகதிக்குப் பின்பு செலுத்தப்படும் வரியுடன், வசிப்பிட வளவுகளுக்கும் வெற்றுக் காணிகளுக்கும் 15 வீதமும், ஏனைய ஆதனங்களுக்கு 20 வீதமும் சேர்த்து அறவிடப்படும் என்பதையும் வரியிறுப்பாளர்களுக்கு ஞாபகமூட்ட விரும்புகின்றேன்.

எனவே 31-03-1992க்கு முன் வரிகளைச் செலுத்தி இச் சபையுடன் ஒத்துழைக்குமாறு சகலரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

த. நவரத்தினராசா,
செயலாளர்,
நகரசபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி. 19-03-1992 (சி-1725)

---

# உயர்கலைக் கல்லூரி

ஆனைப்பந்தி.

[பேராதனை பல்கலைக் கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரே நிறுவனம்]

## பேராதனைப் பல்கலைக்கழகத்துக்கான பதிவு செய்தல்:

## 92 / 93 G. A. Q.

பதிவு செய்வதற்கான முடிவு திகதி;-

## 31 - 03 - 1992

★ பேராதனை பல்கலைக்கழக விண்ணப்பப்படிவங்கள் அனைத்தும் வந்துள்ளன.

★ பயிற்றப்பட்ட ஆசிரியர்கள்/பயிலுனர் ஆசிரியர்கள், G. C. E. A/L மூன்று பாடங்களில் சித்தி அடைந்தோர் ஆகியோர் விண்ணப்பித்துக் கொள்ளலாம்.

★ விண்ணப்பத்துக்கான ஆவணங்கள், அறிவுறுத்தல்களையும் 19 - 03 - 1992 இல் இருந்து இக் கல்லூரியில் பெற்றுக்கொள்ளலாம்.

★ முதல் வரும் 100 மாணவர்களுக்கு மட்டுமே அனுமதிகள் வழங்கப்படும்.

[சி-1676] — பதிவாளர்.

---

# 6ஆம் மாத நினைவஞ்சலி



செல்வன்

## சற்குணலிங்கம் அனுஷன்

(கொக்குவில் இந்துக்கல்லூரி ஆரம்ப பாடசாலை மாணவன்)

அன்னையின் மடியில்: 30—10—1981
ஆண்டவன் அரவணைப்பில்: 21—09—1991

ஆறாகி பெருக்கெடுத்த கண்ணீர் வற்றவில்லை
ஈர் மூன்று மாதங்கள் ஓடிவிட்டனவோ
பெற்ற மனங்கள் வேதனையால் துடிதுடிக்க
பாசமுடன் அரவணைத்த கைகள் பரபரக்க
எமை விட்டு எங்கோடி மறைந்தாய் எம் செல்வமே!
ஓடியாடி விளையாடி நீ ஓய்ந்து விட்டாய்
விளையாட்டே உனக்கு விதியாய் அமைந்ததுவோ!
உன் பிஞ்சு ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்து,
நின் பிரிவால் சொல்லொண்ணா துயருறும்

அன்பு அப்பா, அம்மா, அக்கா,
அப்பம்மா, அம்மம்மா, சித்தப்பாமார்,
தாத்தா, மாமா, அத்தைமார், அன்ரிமார்,
அங்கிள்மார், மற்றும்
உடன் பிறவா சகோதரர்கள்.

நா. சற்குணலிங்கம்,
பூநாறி மரத்தடி,
கே. கே. எஸ். வீதி, கொக்குவில். [20157]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

# புதிய டாக்டர்கள்

யாழ்ப்பாணம் போதனா ஆஸ்பத்திரிக்குப் புதிதாக இருபத்துமூன்று டாக்டர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். நீண்டகாலமாக டாக்டர்கள் பற்றாக்குறை நிலவிவரும் இந்த ஆஸ்பத்திரிக்கு இவ்வளவு டாக்டர்கள் நியமிக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சி தருவதாகும்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வடமாகாணம் முழுவதிலும் பரந்து வாழும் மக்களின் வைத்திய சேவைக்கு மத்திய நிலையமாக விளங்குகிறது.

ஆனால் கடந்த பத்துப் பதினைந்து வருடங்களுக்கு மேலாக, யாழ். ஆஸ்பத்திரியை கீழ்நிலைக்குக் கொண்டுவரும் நோக்கோடு— இலக்கோடு— கொழும்பு அரசாங்கங்களும் அதிகாரிகளும் நடந்து வருகிறார்கள். தமிழ்ப் பகுதியின் பெரிய ஆஸ்பத்திரியை மாற்றாந்தாய் முறையில் நடத்தி வருகிறார்கள்.

தென்னிலங்கையில் கொழும்பு ஆஸ்பத்திரி போன்றவற்றில் வைத்திய வசதிகளும், வாய்ப்புகளும் அபிவிருத்தி செய்யப்படும் அதே நேரத்தில், இங்கு இருந்த வசதி வாய்ப்புகளும் இல்லாமற் செய்யப்படுகின்றன. அதுவும் யுத்தம் தொடங்கிய பின்னர் யாழ். ஆஸ்பத்திரியின் தரம் வீழ்ச்சி கண்டுவிட்டது. அதன் மீது குண்டு வீசியும் சேதப்படுத்தப்படுகிறது.

தென்னிலங்கையில் உள்ள அரசாங்க ஆஸ்பத்திரிகளோடு ஒப்பிடும்போது யாழ். ஆஸ்பத்திரி ஐம்பது முதல் எழுபத்தைந்து வருடங்கள் பின் தள்ளப்பட்டுள்ளது!

அரசாங்கத்தின் இந்தப் புறக்கணிப்பும் சீர்கெடுத்தலும் ஒருபுறமிருக்க—

இந்த மண்ணில் பிறந்து, வளர்ந்து, படித்துப் பயிற்சி பெற்ற டாக்டர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் பணிபுரிவதற்குப் பின்நிற்பது மற்றொரு பெரும் சாபக் கேடாகும்.

ஏற்கனவே இங்கு பணிபுரிந்த பல டாக்டர்கள் அதிக வருமானத்தையும், வசதிகளையும் கருதி வெளிநாடுகளுக்குப் பறந்து விட்டார்கள். இன்னும் பலர் இங்கு யுத்த நிலை தோன்றியதைச் சாட்டாக வைத்துக் கொண்டு தென்னிலங்கைக்கு மாற்றம் பெற்றிருக்கிறார்கள்.

ஏன் யாழ். பல்கலைக்கழகத்திலேயே பயின்று, யாழ் ஆஸ்பத்திரியிலேயே பயிற்சி பெற்ற இளம் டாக்டர்கள் தாம் இங்கு பணிபுரிய முடியாது என்று நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து தென்னிலங்கைக்குச் சேவகம் செய்கிறார்களே!

இத்தகைய பின்னணியில், தங்கள் மண்ணை மறக்காமல், மக்களை மறக்காமல், இத்தனை இடர்களின் மத்தியிலும் இங்கு மக்களோடு மக்களாக வாழ்ந்து, சொந்த மக்களுக்குச் சேவை செய்து வரும் டாக்டர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

அவர்களுடைய இனப்பற்றும், தேசப்பற்றும் மெச்சத்தக்கவை, சொந்த மக்களுக்குரிய சேவையை மனம் வைத்துச் செய்யும் அவர்களுக்கு சகல விதமான ஆதரவையும், ஒத்துழைப்பையும் மக்கள் வழங்க வேண்டும்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியிலேயே பணிபுரிய விரும்பி, அதனையே தமது முதன்மைத் தெரிவாகக் குறிப்பிட்டு இங்கு புதிதாக நியமனம் பெற்ற இளம் டாக்டர்களுக்கும் மக்கள் போதிய உற்சாகமும், ஊக்கமும் கொடுப்பது அவசியம். தமக்கு முந்திய மாணவர் குழுவின் செயலை நிராகரித்து அதற்கு நேர்மாறாக நடந்து கொண்ட புதிய டாக்டர்களின் உணர்வைப் பாராட்ட வேண்டும்.

# ஜி. சீ. ஈ. உயர்தர (விசேட) பரீட்சை நேர அட்டவணை விவரம்

யாழ்ப்பாணம், மார்ச் 21

எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஜி. சீ. ஈ. (உயர்தர) விசேட பரீட்சையின் நேர அட்டவணை வெளிவந்துள்ளது.

முதல் கட்டப் பரீட்சைகள் ஏப்ரல் முதலாம் திகதி முதல் 11 ஆம் திகதி வரையும்— இரண்டாம் கட்டப் பரீட்சைகள் 20 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரையும்— நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேர அட்டவணை விவரம் வருமாறு:-

| திகதி | காலை | மாலை |
|---|---|---|
| 01-04-92 | பொருளியல் I | சிங்களம் I |
| 02-04-92 | சிங்களம் II | இந்துசமயம் I |
| | பொருளியல் II | கிறிஸ்தவம் I |
| | | இஸ்லாம் I |
| | | சமஸ்கிருதம் I |
| 03-04-92 | சித்திரம் I | இந்துசமயம் II |
| | ஆங்கிலம் I | கிறிஸ்தவம் II |
| | | இஸ்லாம் II |
| | | சமஸ்கிருதம் II |
| 04-04-92 | சித்திரம் II | வர்த்தகமும் நிதியும் I |
| | ஆங்கிலம் II | |
| 06-04-92 | புவியியல் I | வர்த்தகமும் நிதியும் II |
| 07-04-92 | புவியியல் II | இந்துநாகரிகம் I |
| | | இஸ்லாமிய நாகரிகம் I |
| 08-04-92 | புவியியல் III | இந்துநாகரிகம் II |
| | | இஸ்லாமிய நாகரிகம் II |
| 09-04-92 | அரசியல் மூலதத்துவங்கள் I | அளவை விஞ்ஞான முறை I |
| 10-04-92 | அரசியல் மூலதத்துவங்கள் II | அளவை விஞ்ஞான முறை II |
| 11-04-92 | | நாடகமும் அரங்கியலும் (தமிழ்) I |
| | | நாடகமும் அரங்கியலும் (ஆங்கிலம்) I |
| 20-04-92 | நாடகமும் அரங்கியலும் (த) II | நாடகமும் அரங்கியலும் (த) III |
| | நாடகமும் அரங்கியலும் (ஆ) II | நாடகமும் அரங்கியலும் (ஆ) III |
| 21 04-92 | விலங்கியல் I | சரித்திரம் I |
| | பிரயோக கணிதம் I | |
| | சரித்திரம் II | |
| 22-04-92 | பிரயோக கணிதம் II | மனைப்பொருளியல் I |
| | விலங்கியல் II | |
| | சித்திரம் III | |
| 23-04-92 | தூயகணிதம் I | மனைப்பொருளியல் II |
| 24-04-92 | தாவரவியல் I | தூயகணிதம் II |
| | தமிழ் I | |
| 25-04-92 | தாவரவியல் II | சங்கீதம் - கர்நாடகம் I |
| | தமிழ் II | சங்கீதம் - மேலைத்தேய I |
| 27-04-92 | இரசாயனவியல் I | நாட்டியம் பரதம் I |
| 28-04-92 | இரசாயனவியல் II | சங்கீதம் - கர்நாடகம் II |
| | நாட்டியம் பரதம் II | சங்கீதம் - மேலைத்தேய II |
| 29-04-92 | பௌதிகவியல் I | விவசாய விஞ்ஞானவியல் I |
| | கணக்கியல் I | |
| 30-04-92 | பௌதிகவியல் II | விவசாய விஞ்ஞானவியல் II |
| | கணக்கியல் II | |

### வடக்கின் பெரும் கிரிக்கெட் மோதல்:

# சென்றல் உச்ச நிலையில்! சதம் அடித்தார் ரகுதாஸ்!!

யாழ்ப்பாணம், மார்ச் 21

வடக்கின் மிகப்பெரும் கிரிக்கெட் போட்டியின் நேற்றைய முதல் நாள் ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய [சென்றல்] கல்லூரி அணி உச்ச நிலையை எட்டிப்பிடித்தது. அந்த அணியில் உதவி கப்டன் ஈ. ரகுதாஸ் அபாரமாகத் துடுப்பெடுத்தாடி சதம் எல்லையைத் தாண்டி 143 ஓட்டங்களை எடுத்தார்.

நேற்றுக்காலை பூவா தலையா சுண்டிப் பார்த்ததில் வெற்றியீட்டிய சென் ஜோன்ஸ் அணித் தலைவர் எம். காண்டீபன், சென்றல் கல்லூரி அணியை முதலில் துடுப்பாட அழைத்தார்.

காலை ஆரம்பத் துடுப்பாட்டம் மந்தமாகவே இருந்தது. எனினும் நண்பகலுக்குப் பின் ஆட்டம் சூடு பிடித்தது.

சென்றல் கல்லூரி அணி முதல் இன்னிங்ஸில் 344 ஓட்டங்களைப் பெற்று புதிய சாதனை ஒன்றைப் படைத்தது.

இதுவரை காலமும் வடக்கின் பெரும் மோதலில் [Big Match] ஒரு இன்னிங்ஸில் ஓரணி பெற்ற ஆகக்கூடிய ஓட்ட எண்ணிக்கையான 311 ஓட்டங்களை, சென்றல் கல்லூரி அணி முறியடித்தது.

சென் ஜோன்ஸ் கல்லூரி அணி 1990 ஆம் ஆண்டுப் போட்டியில் 5 விக்கெ[illegible]புக்கு 311 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இந்தச் சாதனை நேற்று முறியடிக்கப்பட்டது.

சென்றல் வீரர் ரகுதாஸ் 143 ஓட்டங்களைப் பெற்று சிறப்பு வீரராகத் திகழ்ந்தார்.

சென்றல் — சென் ஜோன்ஸ் பெரும் மோதல்களில்— 1990 ஆம் ஆண்டு — சென் ஜோன்ஸ் வீரர் எஸ். சுரேன்குமார் 145 ஓட்டங்களைப் பெற்று நிலைநாட்டிய சாதனையை எட்டிப் பிடிக்க இரு ஓட்டங்கள் இருக்கையில் ரகுதாஸ் ஆட்டமிழந்தது நேற்றைய விளையாட்டின் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

சென்றல் தரப்பில் என். சுரேஷ் 26, பி. ரமேஷ் 25, கே. பிரபாகரன் 24, கே. சுரேஷ் 23, எஸ் மதிவதனன் 41, எம். குமரேசன் 29 ஓட்டங்களைப் பெற்றனர்.

சென் ஜோன்ஸ் அணித் தலைவர் எம். காண்டீபன் 87 ஓட்டங்களுக்கு இரு விக்கெட்டுகளையும், ஏ யோகதாஸ் 76 ஓட்டங்களுக்கு 5 க்வி

[6 ஆம் பக்கம் பார்க்க]

### “பொன் அணிகள் போர்”

# சென். பற்றிக்ஸ் அணி 6 விக்கெட் இழந்து 183

யாழ்ப்பாணம், மார்ச் 21

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் அணிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கும் இடையிலான 75 ஆவது வருட ‘‘பொன் அணிகள் போர்’’ கிரிக்கெட் ஆட்டம் நேற்றுப் பிற்பகல் சென். பற்றிக்ஸ் மைதானத்தில் — ஆயிரக்கணக்கான ரசிகர்கள் மத்தியில்—பெரும் ஆரவாரத்துடன் ஆரம்பமானது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ் அணி நேற்று [illegible] 6 விக்கெட் இழப்புக்கு 183 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. என். அஜந்த் தேவராஜா ஆட்டமிழக்காமல் 70 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

யாழ்ப்பாணக் கல்லூரி அணித்தலைவர் ரி வீரசுதன் நேற்றைய ஆட்டத்தில் 3 விக்கெட்டுகளை வீழ்த்தியிருந்தார்.

இன்று காலை 9 மணிக்கு ஆட்டம் ஆரம்பமாகும் போது சென். பற்றிக்ஸ் அணி தொடர்ந்து துடுப்பெடுத்தாடும்.

[உ-20]

## கலைநிகழ்ச்சி

யாழ்ப்பாணம், மார்ச் 21

விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் மாதாந்த கலை நிகழ்ச்சி கோண்டாவில் மாவட்டச் செயலகத்தில் அமைந்தள்ள மாவீரர் கலையரங்கில் நாளை ஞாயிறு மாலை 7.30 மணிக்கு நடைபெறவிருகிறது.

விடுலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில் உருவான ‘‘போர்க் குயில்’’ என்ற நாடகமும், யாழ். பல்கலைக் கழக மாணவர் வழங்கும் ‘‘காலச் சூழலில் மறையாத காலடிச் சுவடுகள்’’ என்றும் கவியரங்கும், தென்மராட்சிப் பிரிவு கலை பண்பாட்டுக் கழக ஆதரவில் ‘மாவீரர் வரிசையிலே’ என்னும் நாடகமும் இடம்பெறும்.

[இ-3]

## ஆஸ்பத்திரிக்குழு திரும்பியது

யாழ்ப்பாணம் மார்ச் 21

கொழும்பு சென்ற யாழ். ஆஸ்பத்திரி தூதுக்குழு நேற்று யாழ்ப்பாணம் திரும்பியது.

ஆஸ்பத்திரியின் அவசர தேவைகள் குறித்து சுகாதார, பாதுகாப்புத்துறை அதிகாரிகளுடன் இந்தக் குழுவினர் பேச்சு நடத்தியிருந்தனர்.

[இ-15-3]

## உற்சவம்

மயிலணி, மார்ச் 21

சுன்னாசம் மயிலணி இராஜராஜேஸ்வரி ஆலயத்தின் அலங்கார உற்சவம் இன்று காலை 9 மணிக்கு சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகும். தொடர்ந்து பத்து நாட்களுக்கு தினசரி மாலை 4.30 மணிக்கு அபிஷேகம், உற்சவம் ஆகியவை நடைபெறும். வருடாந்தப் பொங்கல் நிகழ்ச்சி ஏப்ரல் 6 ஆம் திகதி காலை 8 மணிக்கு ஆரம்பமாகும்.

[உ-89]

## தமிழ்த் தின போட்டிகள்

சாவகச்சேரி, மார்ச் 21

சாவகச்சேரி கல்விக் கோட்ட மட்டத்தில் தமிழ்த் தினப் போட்டிகள் நாளை 22 ஆம், 23 ஆம் திகதிகளில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும், டிறிபேக் கல்லூரியிலும் நடைபெறவிருக்கின்றன.

[இ-31]

## நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 21

நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்கத்தின் பணிமனை திருநெல்வேலிச் சந்தியில் மாடிக் கட்டடம் ஒன்றில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த சங்கக் கட்டடத்தில் பாவனையாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் நலன் கருதி பதிவேடு ஒன்றும் வைக்கப்பட்டுள்ளது.

வர்த்தகர்கள் அல்லது பாவனையாளர்கள் இந்தப் பதிவேட்டில் தமது முறைப்பாடுகளையும், கருத்துக்களையும் பதிய முடியும் என்று பிரஸ்தாப சங்கத் தலைவர் என். கே. குலசிங்கம் தெரிவித்தார்.

[இ-எ]

## படையினர் வேட்டு சிறுமி காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 21

மாவிட்டபுரம் இராணுவ முகாமில் இருந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுக்கு, தெல்லிப்பளை, புதுத்தோட்டப் பகுதி வீடு ஒன்றின் முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்த நான்கு வயதுச் சிறுமி காயம் அடைந்தார்;

கடந்த வியாழக்கிழமை இச்சம்பவம் நடந்தது. முருகையா கவிதா என்பவரே காயம் அடைந்தவர் ஆவார்.

(இ-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாயாறு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அவற்றிலிருந்து கடும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. அதனால் முல்லைத்தீவு முழுவதும் அதிர்ந்தது.

இராணுவத்தினரின் வான், கடல், தரை மார்க்கமான கடும் மும்முனைத் தாக்குதல்களின் மத்தியிலும் விடுதலைப் புலிகள் உக்கிரச் சமர் புரிந்தனர். இந்தச் சமரில் 22 விடுதலைப் புலிகள் களப் பலியாகினர்.

நேற்றுக் காலையிலும், நண்பகலிலும் கடும் மோதல்கள் தொடர்ந்ததாகத் தகவல்கள் கிடைத்தன.

இதேவேளை நேற்று முன்தினம் மாலை கொக்குத்தொடுவாயில் இருந்து நாயாறுப் பக்கம் முன்னேற முயன்ற இராணுவத்தினரை விடுதலைப் புலிகள் வழி மறித்து தாக்கினர். அவ்வேளை இரு சாராரும் இருபது நிமிட நேரம் நேரடித் துப்பாக்கிச் சமரில் ஈடுபட்டனர். அந்த மோதல்ல் பதினைந்துக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் உயிரிழந்ததாக அறிவிக்கப்படுகிறது. விடுதலைப் புலிகள் பல நவீன ஆயுதங்களையும் கைப்பற்றினர்.

இத்தாக்குதலைத் தொடர்ந்து (நேற்று முன்தினம்) இரவு அப்பகுதியில் பரவலாக விமானத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இரவிரவாக ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

[அ-5-15]

## தாயகம்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இணங்கிவிட்டால் தமிழ் நாட்டில் இருக்கும் சகலரையும் திரும்ப அழைப்பதற்கு இலங்கை அரசாங்கம் ஏற்பாடு செய்யும் எனவும் அறியவந்தது.

ஐ. நா. அகதிகள் தூதரகம் ஏற்கனவே மடுவில் 50,000 அகதிகள் கொண்ட ஒரு முகாமையும், பேசாலையில் 20,000 அகதிகள் கொண்ட ஒரு முகாமையும் பராமரித்து வருவது குறிப்பிடத்தக்கது. இவற்றில் மன்னார், வவுனியா, திருமலை ஆகிய இடங்களைச் சேர்ந்த அகதிகள் தங்கியுள்ளனர். [அ-3]

## கைப்பற்றப்பட்ட..

[1ஆம் பக்கத் தொடர்சி]

★ ஜே. ஆர். ரக கைக் குண்டுகள் — 02
★ ஐக்கட் கோல்சர் — 02
★ தண்ணீர் கான் — 03
★ கண்ணிச் சப்பாத்து — ஒரு சோடி
★ ரி 56 மகஸின் — 06
★ ரி 81 மகஸின் — 04
★ ஹெல்மட் — 01

(இ-3)

## சென்றல்.,

[5 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கெட்டுகளையும் வீழ்த்தினர்.

நேற்றுமாலை முதல் இன்னிங்ஸில் துடுப்பாட்டத்தை ஆரம்பித்த சென் ஜோன்ஸ் அணி ஆட்ட நேர முடிவின் போது ஒரு விக்கெட் இழப்புக்கு 33 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

ஆட்டம் மீண்டும் இன்று காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும். [உ]

## 22 வீர.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கம் லிங்கன் - மூதூர்], இரண்டாம் லெப்டினன்ட் இளங்கோ [சித்திரவேல் அசோக்குமார் - மூதூர்].

இரண்டாம் லெப்டினன்ட். அசோகன் [சுப்பையா யோகராசா - வாழைச்சேனை], இரண்டாம் லெப்டினன்ட் சந்திரன் [ராசு ஆறுமுகம் - வவுனியா], கப்டன் பாவலன் [சற்குணநாதன் ஜீவரட்னம் - மயிலிட்டி], லெப்டினன்ட் சிவராஜ் [குமாரலிங்கம் மோகனதாஸ் - இத்தாவில்], இரண்டாம் லெப்டினன்ட் ரஞ்சித்குமார் [குருசாமி தவராசா - மன்னார்], வீரவேங்கை இலக்குமணன் [சுப்பிரமணியம் மகேந்திரன் - தம்பலகாமம்]. திருச்செல்வம் [நாகமணி பிரேமானந்தன் - கல்முனை], தில்லை அழகன் [கறுப்பையா சிவகுரு - வவுனியா] இளம்வழுதி [அந்தோனிமுத்து டொமினிக் - நாவற்குழி], தமிழ்மாறன் [அந்தோனிப்பிள்ளை லோறன்ஸ்- முல்லைத்தீவு], எல்லாளன் [நாதன் சிறி - அக்கரைப்பற்று], லெப். ஆதவன் [சுப்பிரமணியம் பாஸ்கரன் - முல்லைத்தீவு].

[இ-3]

## இன்று

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று அச்சுவேலி விக்னேஸ்வரா அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் சென்மேரிஸ் அணி மோதுகிறது. இந்த ஆட்டம் இனறு பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீட மைதானத்தில் நடைபெறும்.

★ ★ ★

யாழ். மாவட்டப் பாடசாலைளின் 15 வயதுக் குட்பட்டோர் அணிகளுக்கிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இரண்டு கால் இறுதி ஆட்டங்கள் இன்று கொக்குவில் இந்துக் கல்லூரி, மைதானத்தில் நடைபெறும்.

பிற்பகல் 8.30 மணிக்கு முதலாவது கால் இறுதி ஆட்டத்தில் மகாஜனாக் கல்லூரி அணியும், நாவாந்துறை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை அணியும் மோதும்.

பிற்பகல் 4.30 மணிக்கு மற்றைய கால் இறுதி ஆட்டத்தில் உரும்பராய் இந்துக் கல்லூரி அணி, யாழ். புனித ஜோசப் கல்லூரி அணியை எதிர்த்து விளையாடும்.

## காங்கேசன்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வைப்பதற்கும் காங்கேசன் துறை— கீரிமலை வீதியைப் பயன்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

காங்கேசன் துறை - கிரிமலை வீதி வழியாக வாகன அணிகளில் சென்று உணவுப் பொருள்களை எடுத்து வருவது போன்று நோயாளர்களையும் அழைத்துவர முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான பரீட்சார்த்த முயற்சி வெற்றி அளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் இருந்து நோயாளி ஒருவர் இந்தப் பாதை மார்க்கமாக பலாலிக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அதே போன்று தீவுப் பகுதியில் இருந்தும் ஒரு நோயாளி இந்தப் பாதை மார்க்கமாக யாழ்ப்பாணம் அழைத்து வரப்பட்டார்.

## இலங்கை திரும்புமாறு..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

முடிவு செய்யப்பட்டுள்ளது.

மண்டபம் முகாமில் தற்போது 9 ஆயிரம் அகதிகள் உள்ளனர். 24 மணித்தியாலத்தில் வெளியேறி சிறு முகாம்களுக்கு செல்ல வேண்டும் என்று அவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். மண்டபம் முகாம் 'பயணமாற்று' முகாமாகவே இனிச் செயல்படும்.

தமிழகத்தில் உள்ள இரண்டு லட்சத்து 20 ஆயிரம் அகதிகளில் 30 ஆயிரம் அகதிகள் மட்டுமே இலங்கை திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளனர்.

இப்படி பி. பி. ஸிக்கு அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

[இ-10]

# மரண அறிவித்தல்கள்

## கபிரியேல் பிரகாசம்

சென். ஜேம்ஸ் வீதி, பலாலி தெற்கை வசிப்பிடமாகக் கொண்ட திரு. கபரியேல் பிரகாசம் அவர்கள் 19-03-1992 இல் காலமானார். அன்னார் ஞானசௌந்தரியின் அன்புக் கணவரும் றொபேட் டார்வின், மரியராணி ஆகியோரின் அன்புத் தந்தையும், பன்னீர்ச்செல்வம் [கிராம சேவையாளர் அல்வாய்] அவர்களின் மாமனாரும், சூசைப்பிள்ளை, அருளப்பு, இராயப்பு, காலஞ்சென்ற யோசேப், செபஸ்தியாம்பிள்ளை, சூசையம்மா, பெனடிற் ஆகியோரின் சகோதரரும், ஊத்தம்மா அன்னரத்தினம், திரு. திருமதி தங்கராசா ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று [21-03-1992] காலை 8-30 மணியளவில் கோப்பாய் வடக்கு இல்லத்திலிருந்து புனித சூசையப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

தகவல்
த. பன்னீர்ச்செல்வம்
[கிராம சேவையாளர்]
[மருமகன்]

உரும்பராய் கமநல சேவை நிலைய வீதி,
கோப்பாய் வடக்கு. [20173]

## தெய்வேந்திரசிங்கம் (ரத்தினம்)

அராலி கிழக்கைச் சேர்ந்த தெய்வேந்திரசிங்கம் [ரத்தினம்] [இளைப்பாறிய சிரேஷ்ட தொழில் நுட்ப அதிகாரி, பெருந் தெருக்கள் திணைக்களம்], 18-3-92 புதன்கிழமை அன்று காலமானார். அவர் காலஞ்சென்ற ஆசிரியை பரிபூரணத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற ஜே. எம் கதிர்காமர் அன்னம்மா தம்பதிகளின கனிஷ்ட புதல்வனும் வனிதமலர் [மலர்], வனிதலஷ்மி [பூ], சுப்பிரமணியம் [இளைப்பாறிய மேலதிகப் பணிப்பாளர் கட்டடத் திணைக்களம்] ஆகியோரின் அன்புச் சகோதரனும் திருமதி சுகிர்தலஷ்மி சுப்பிரமணியம் [இளைப்பாறிய உப அதிபர் கொக்குவில் இந்துக் கல்லூரி] அவர்களின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் மரணச் சடங்குகள் அன்று நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுகிறோம்.

தகவல்:
க. சுப்பிரமணியம்

கே. கே. எஸ். வீதி,
கொக்குவில் கிழக்கு. [20175]

## துரையப்பாபத்தர் வேணுகோபால்

யாழ்ப்பாணம், கன்னாதிட்டியைச் சேர்ந்த துரையப்பாபத்தர் வேணுகோபால் காலமாகிவிட்டார்.

இவர் கனகவல்லியின் அன்புக் கணவரும், சிவகாமி, வசந்தகுமாரி, ரவீந்திரன், மகேந்திரன், யோகேந்திரன், லீலா, கோகிலம், சாந்தி, மல்லிகா, ஆனந்தி, செல்வம் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், இராதாகிருஷ்ணன். நந்தகுமார் [மட்டக்களப்பு], ரவீந்திரகுமார் [இந்தியன் ஓவசீஸ் வங்கி, கொழும்பு], பாரிவேல் [இந்தியா], யோகாம்பிகை, லீலாவதி, சந்திரசேகர், சூரியமூர்த்தி, ராகவன், லலிதா ராஜராஜன் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற து. கிருஷ்ணசாமி, மற்றும் து. பஞ்சரெத்தின கோபால, து. இராஜகோபால், து. கோபாலசாமி, காலஞ்சென்றவர்களான இராசாமணி, ஞானாம்மாள், மகேஸ்வரி மற்றும் மகாலட்சுமி, ஜெயலட்சுமி, பாக்கியலட்சுமி, வரதலட்சுமி ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்றவர்களான கோவிந்தசாமிப்பத்தர், செல்லையாப்பத்தர். இராசமாணிக்கப்பத்தர், சாம்பசிவப்பத்தர், துளசிப்பத்தர் மற்றும் பார்வதி, இராஜம், மகேஸ்வரி, மீனா, சிவசுப்பிரமணியம் [பாரத் ஸ்ரூடியோ]. சண்முகானந்தம் ஆகியோரின் மைத்துனரும், மாலதி, ஜசோதா, வரதராஜன், ரகுபதிராஜன், கோவிந்தராஜன், வத்ஷன், சிந்துஜா, தர்ஷன், கௌஷன், பிரதீபன், அனோஜன், பிரசன்னா, சரண்யன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 21-3-92 சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
வே. மகேந்திரன்

110 [33], கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். [20176]

# மாணவ தாதிகள் தெரிவுப் பரீட்சை

சுகாதார நிறுவனங்களில் கடமை புரியும் ஊழியர்களில் இருந்து மாணவ தாதிகள் தெரிவிற்கான பரீட்சை 23-03-1992 திங்கட்கிழமை காலை 9-00 மணிக்கு தாதிகள் பயிற்சிப் பாடசாலையில் நடைபெறும். பரீட்சைக்கு தெரிவு செய்யப்பட்ட ஊழியர்களின் பெயர் பின்வருமாறு:-

| | பெயர் | பதவி | நிறுவனம் | |
|---|---|---|---|---|
| 01. | வை. தவராஜசிங்கம் | பெ/தொ | மா.வை. | பருத்தித்துறை |
| 02. | ஆர். அரசரத்தினம் | ,, | ,, | ,, |
| 03. | கே. செல்வராசா | ஆ/பரி | ,, | ,, |
| 04. | வி. ஜெயதேவராசா | ,, | ,, | ,, |
| 05. | எஸ். சந்திரமோகன் | ,, | ,, | ,, |
| 06. | ஆர். செல்வராசா | ,, | ,, | ,, |
| 07. | கே. இராசரட்னம் | கு.ந.சே | ,, | சாவகச்சேரி |
| 08. | எஸ். பரமேஸ்வரி | பெ/தொ | ,, | ,, |
| 09. | எஸ். ஜெகதீஸ்வரன் | ஆ/பரி | ,, | ,, |
| 10. | என். பகவதி | பெ/பரி | ,, | தெல்லிப்பளை |
| 11. | வி. பாலசுப்பிரமணியம் | கு.ந.சே. | ,, | ,, |
| 12. | வி. குணபாலன் | ஆ/பரி | ,, | ,, |
| 13. | கே. துரைசிங்கம் | ,, | ,, | ,, |
| 14. | ஏ. சுப்பிரமணியம் | பெ/பரி | சு-சு. | கோப்பாய் |
| 15. | எஸ். நற்குணராஜா | ஆ/பரி | ,, | ,, |
| 16. | எம். நவராஜா | காவலாளி | மா.வை. | நெடுந்தீவு |
| 17. | வி. பாலசுப்பிரமணியம் | பெ/பரி | கி.வை. | பண்டத்தரிப்பு |
| 18. | உ. ஜெயகாந்தன் | கு.ந.சே. | ம.ம.ம.ம. | மண்டைதீவு |
| 19. | ஏ. ஞானேஸ்வரன் | — | சு-சு. | காரைநகர் |
| 20. | எஸ். புஸ்பவதி | கு.ந.சே. | மா.வை. | ஊர்காவற்றுறை |
| 21. | கே. அன்பழகன் | ஆ/பரி | ,, | ,, |
| 22. | ஏ. கௌரி சிவா | பெ/பரி | ,, | ,, |
| 23. | பி. எம். டொமினி அம்மா | ,, | ,, | நெடுந்தீவு |
| 24, | எஸ். ஜெயசீலி | கு.ந.சே. | சு வை.அ. | கிளிநொச்சி |

இவர்களுக்கான அனுமதி அட்டை கடமை புரியும் நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலே குறிப்பிடப்பட்டவர்கள் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடினும் பரீட்சைக்குச் சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

டாக்டர் வி. சிறீகாந்தா
சுகாதார [illegible]
யாழ்ப்பாணம்.

(சி-1683)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 392/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 21-3-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org